# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2054 • அக்டோபர் 28, 2023 Weekly E-paper • October 28, 2023


## வாழ்க வசவாளர்கள்!

சுப.வீரபாண்டியன்



## பசிப்பிணியால் வாடும் மக்கள்! பகடி செய்யும் ஒன்றியம்!

மா.உதயகுமார்

## ஆயுதமில்லா, போரில்லா உலகம் வேண்டும்!

தலையங்கம்

## ஆளுநருக்கு அஞ்சும் எடப்பாடி!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● அக்டோபர் 28, 2023 Weekly E-paper ● October 28, 2023


# வாழ்க வசவாளர்கள்!

**சுப.வீரபாண்டியன்**

ஆளுநரின் தொல்லை அன்றாடம் கூடிக் கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு நாளும், அரசும், ஆளும் கட்சியும், கூட்டணிக் கட்சியினரும் வேறு வேலைகள் எதிலும் கவனம் செலுத்த இயலாத வண்ணம், ஏதேனும் ஒரு விவாதத்திற்குரிய செய்தியை ஆளுநர் பேசிக் கொண்டே இருக்கிறார். அவருக்கு விடை சொல்வதற்கும், அவர் கூறியிருக்கிற தவறான தகவல்களை ஆதாரம் காட்டி மறுப்பதற்கும்தான் எல்லோருக்கும் நேரம் சரியாக இருக்கிறது. இது ஒரு திட்டமிட்ட திசை திருப்பும் உத்திதான் என்று தெரிந்தாலும், மிகப்பெரிய பொறுப்பில் இருக்கும் ஒருவர் இப்படிச் செய்வதால், அதற்கு எல்லோரும் எதிர்வினை ஆற்றியே தீர வேண்டியிருக்கிறது.



விடுதலைப் போராட்ட வீரர்களைத் தமிழ்நாடு அரசு சிறப்பிக்க மறந்து விட்டது என்கிறார்.

பசும்பொன் தேவர் ஜெயந்தியையொட்டி 144 தடை உத்தரவு போட்டது தவறு என்கிறார்.

ஆரியம் – திராவிடம் என்று எதுவும் இல்லை, எல்லாம் ஆங்கிலேயர்கள் உருவாக்கிய கற்பனை என்கிறார்.



இப்படி ஒவ்வொரு நாளும் ஆளுநர் ஏதேனும் ஒன்றைப் பற்றிப் பேசிக் கொண்டே இருக்கிறார்.

திடீரென்று ஆளுநர் மாளிகையில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டு விட்டது என்று ஒரு புகார் வருகிறது. அதனை விசாரித்த காவல்துறை, வீடியோ ஆதாரங்களோடு அதனை மறுத்திருக்கிறது.

இப்படி, தன் வேலைகள் எதனையும் செய்யாமல், வேலை செய்கிறவர்களையும் செய்ய விடாமல், எல்லாவற்றிற்கும் பெரும் இடையூறாக விளங்கும் ஆளுநரை உடனே திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கைதான் மாண்புமிகு முதல்வரிடமிருந்து வரும் என்று எல்லோரும் எதிர்பார்த்தோம்.

ஆனால் நேற்றைய மணவிழா ஒன்றில், சென்னையில் பேசிய முதல்வர் அவர்கள், ஆளுநர் ஆர்.என். ரவியை மாற்றவே கூடாது என்றும், குறைந்தது வரும் நாடாளுமன்றத் தேர்தல் வரையுமாவது அவரை மாற்றாமல் இருக்க வேண்டும் என்றும் இந்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

இது ஒரு நல்ல வேண்டுகோள் என்றே தோன்றுகிறது. எதிர்மறைத் தூண்டுதல்கள் சில வேளைகளில் நன்மை பயக்கும் என்பதும் உண்மைதான். ஆளுநர் ரவி அவர்களின் செயல்பாடுகள் அவரின் நடத்தையையும், அவருக்குப் பின்னால் இருக்கும் ஒன்றிய அரசின் வஞ்சகத் தன்மையையும் வெளிக்காட்டும்!

அதேபோல, வரும் ஒன்றாம் தேதி, திராவிட ஒழிப்பு மாநாடு ஒன்றை நடத்த இருப்பதாக ஒரு சிறு கும்பல் அறிவித்துள்ளது. அதையும் நாம் வரவேற்போம். திராவிடம் எப்போதும் பேசு பொருளாக இருப்பதற்கு இவை போன்ற நிகழ்வுகள் உதவும்!

பேரறிஞர் அண்ணாவின் வரியை இப்போது நாம் நினைவு படுத்திக் கொள்ளலாம் – “வாழ்க வசவாளர்கள்”.

# பசிப்பிணியால் வாடும் மக்கள் பகடி செய்யும் ஒன்றியம்!

**மா.உதயகுமார்**

உலகளாவிய பசிக் குறியீட்டுப்(Global Hunger Index) பட்டியல் ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படுகிறது. இந்த ஆண்டு வெளியிடப்பட்ட பட்டியலில் 125 நாடுகளில் இந்தியா 111ஆவது இடத்தில் இருக்கிறது. பொருளாதாரம் நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கும் அண்டை நாடுகளான இலங்கை 60ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 102 ஆவது இடத்திலும், வங்கதேசம் 81ஆவது இடத்திலும் இருக்கின்றன. ஆனால் பாஜக ஆட்சியில் உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உயர்ந்திருக்கிறது என்று அவர்கள் தம்பட்டம் கொள்ளும் வேளையில், பசிக் குறியீட்டில் 111 ஆவது இடத்தில் இந்தியா இருக்கிறது.




(நன்றி : DMKNRIWing)

பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ளனவும் மிகச் சிறிய நாடுகளுமான ஆப்கானிஸ்தான், ஏமன், மடகஸ்கர்,

சிரியா, காங்கோ, டைமர் ஆகிய சில நாடுகள் மட்டுமே இந்தியாவை விடப் பின்தங்கி இருக்கின்றன.




பிரதமர் மோடிக்கு ஆதரவாக வெளிநாடுகளிலிருந்து எந்த ஒரு கருத்துக்கணிப்போ அல்லது கணக்கெடுப்போ வந்தால் உடனே அதனைப் பெரிய அளவில் விளம்பரப்படுத்திப் பெருமை பேசுவதையும், அதேநேரம் அவர்களுக்குச் சாதகமில்லாத அறிக்கைகள் வெளிவரும்போது அவற்றை இந்தியாவின் மாண்பைக் கெடுக்க வெளிநாடுகள் செய்யும் சதி என்று சொல்வதையும் பாஜக அரசு வழக்கமாகக் கொண்டுள்ளது.

பாஜக ஆட்சிக்கு வந்த பின் உலக அளவில் இந்தியா விஷ்வகுருவாக உயர்ந்து நிற்கிறது என்றும், ஜெய்சங்கர் வெளியுறவுத்துறை அமைச்சரானதால் உலக நாடுகளுடனான உறவை இந்தியா வலுப்படுத்தி இருக்கிறது என்றும் தொடர்ந்து பேசி வரும் பாஜகவினர் இப்போது உலகளாவிய பசிக்குறியீடு வெளிநாடுகளின் சதி என்று சொல்வது

முரணான கூற்றாக இருக்கிறது.

இது குறித்துச் செய்தியாளர்களிடம் பேசிய ஒன்றிய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இராணி,

“உலகப் பசிக் குறியீட்டுப் பட்டியல் எப்படி எடுக்கப்படுகிறது... இந்தியாவில் 140 கோடி மக்களில் 3,000 பேரிடம் தொலைபேசியில் அழைத்து ‘உங்களுக்குப் பசிக்கிறதா?’எனக் கேட்டு, பட்டினிக் குறியீடு நிர்ணயிக்கப்படுகிறது. டெல்லியிலிருந்து நான் காலை 4 மணிக்குக் கிளம்பினேன். 5 மணிக்குக் கொச்சி விமான நிலையத்துக்கு வந்தேன். பிறகு அங்கிருந்து விமானத்தில் பயணம் செய்து ஹைதராபாத் வந்தடைந்தேன். இப்படியான நேரங்களில் நான் உணவு சாப்பிட 10 மணிக்கு மேல் ஆகும். இந்த சமயத்தில் போன் செய்து ‘உங்களுக்குப் பசிக்கிறதா?’ என்று கேட்டால், நான் பசிக்கிறது என்றுதான் சொல்வேன்.

இப்படித்தான் பட்டினிக் குறியீடு தயாரிக்கப்படுகிறது. இதில் இந்தியாவைவிடப் பாகிஸ்தான் முன்னிலையில் இருப்பதாகக் கூறுகிறார்கள். இதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா?” என்று கூறியுள்ளார்.

இப்படி நக்கலும், கிண்டலும் நிறைந்த ஒரு பதிலை, பொறுப்புள்ள அமைச்சர் பதவியில் அமர்ந்து கொண்டு ஸ்மிருதி இராணி சொல்லியிருக்கிறார். பசிக்கு குறியீடு எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்பது அவருக்கு தெரியாமல் இருக்காது. அப்படி தெரியாமலிருந்தால் அவ அமைச்சர் பதவிக்குப் பொருத்தமானவரா என்கிற கேள்வி எழுகிறது. தெரிந்திருந்தும் பொய்யாக இப்படி ஒரு தகவலைச் சொன்னால் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் வாடும் அத்தனை ஏழை எளிய மக்களையும் அவர் கிண்டல் செய்கிறார் என்று பொருள். ஸ்மிருதி இராணி பேச்சைத் தொடர்ந்து ஒன்றிய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமும் இதே தொனியில் ஒரு அறிக்கையை அதிகாரப்பூர்வமாக வெளியிட்டிருக்கிறது.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !
கருஞ்சட்டைத் தமிழர்

## ஆயுதமில்லா, போரில்லா உலகம் வேண்டும்!

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் திருப்பூர் (22-10-2023) பொதுக்குழுவில் பேசும் போது, தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள் "ஆயுதம் இல்லாத, போரில்லாத உலகம் வேண்டும் என்பதே நம் நோக்கம்" என்று பேசியது ஆழ்ந்த பொருளுடையதாகும்.

ஆயுதம் என்பதில் ராணுவத்திடம் இருக்கும் போர்க் கருவிகளும் அடங்கும், வெறி பிடித்தலையும் கலவரக் கும்பலிடம் இருக்கும் கொலைக் கருவிகளும் அடங்கும்.



இஸ்ரேல் – ஹமாஸ் இடையே நடைபெற்றுக் கொண்டு இருக்கும் கொடுமையான போரினால் பல்லாயிரக்கணக்கான மக்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் எனக் கொல்லப்பட்டு உள்ளார்கள்.

ஹமாஸ் அமைப்பினர் ஒருவேளை போரை நிறுத்தச் சம்மதித்தாலும், இஸ்ரேல் சம்மதிக்காது என்று இப்போதைய நிலவரம் சொல்கிறது.

இது தொடர்ந்தால் இன்னோர் உலகப் போரை பூமி தாங்காது.

ராமர்கோயில், ரதயாத்திரை, மத, இனக்கலவரக் காரர்களிடம் இருக்கும் ஆயுதம், கொலைக் கருவிகள்.

கோத்ரா சம்பவம், மணிப்பூர் கலவரம் போன்றவைகளில் கொலைக் கருவிகளின் ஆட்டத்தைச் சொல்ல முடியவில்லை.

எந்த ஆயுதங்களாலும் மக்களின் உயிரைப் பறிக்க யாருக்கும் உரிமையில்லை.

உலகம் அமைதியிலும், வளர்ச்சியிலும் இருக்க வேண்டும்.

இஸ்ரேல் – பாலஸ்தீனம் பிரச்சனைக்குப் போர்க்களங்களில் தீர்வு காண வேண்டாம்.

மதத்கலவரம், இனக்கலவரங்களுக்கு ஆயுதங்கள் தீர்வாகாது.

மனிதம் வாழவேண்டும்,

மனிதம் தழைக்க வேண்டும். ஆயுதங்கள் வீழவேண்டும்.

" கெட்ட போரிடும் உலகத்தை, வேரொடு சாய்ப்போம்" சொல்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்.

முன்பக்கத்தொடர்ச்சி

*அதற்கு உலகளாவிய பசிக் குறியீட்டுப் பட்டியலைத் தயாரிக்கும் நிறுவனம் தகுந்த பதிலைத் தெரிவித்திருக்கிறது. அய்க்கிய நாடுகள் அவையின் FAO, UNICEF, உலக சுகாதார நிறுவனம், உலக வங்கி ஆகிய சர்வதேச அமைப்புகளின் பல்வேறு அறிக்கைகளின் மூலம் பசிக்குறியீடு கணக்கிடப்படுகிறது. இந்த நிறுவனங்களின் தரவுகள் பெரும்பான்மையானவை இந்திய அரசும் அதன் மற்ற நிறுவனங்களும் அதிகாரப்பூர்வமாக வெளியிட்டவை ஆகும். உண்மை இப்படி இருக்க போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து உலக அளவில் இந்தியாவின் மதிப்பை இழக்கச் செய்திருக்கிறது ஒன்றிய பாஜக அரசு.*

*உலக அளவில் இப்படிப்பட்டத் தலைகுனிவை ஏற்படுத்திவிட்டுத்தான் ஒன்றிய அரசு அதனுடைய சாதனைகளை இந்தியாவின் மூலை முடுக்கெங்கும் விளம்பரப்படுத்த "விக்சித் பாரத் சங்கல்ப் யாத்ரா" என்னும் சாலை நிகழ்ச்சியை நவம்பர் 20 முதல் ஜனவரி 25, 2024 வரை நடத்தத் திட்டமிட்டிருக்கிறது.*

*ஏழைகளின் உணவுப் பற்றாக்குறை, ஊட்டச்சத்துப் பற்றாக்குறையைப் போக்க என்ன செய்வது என்பதைச் சிந்திக்காமல் அது பற்றிய உரையாடல்களை எழவிடாமல் உலகப் பசிக் குறியீட்டு அறிக்கையின் மீது போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து திசை திருப்புகிறார்கள் இவர்கள். உலகளவில் 111ஆவது இடத்திலருக்கும் இந்நிலையில்தான் தமிழக அரசு கொண்டுவந்த காலை உணவுத் திட்டத்தை, தினமலர் போன்ற அவர்களுடைய பத்திரிக்கைகள் மூலம் இழிவுபடுத்தி, கிண்டல் செய்து எழுதினார்கள்.*

*பாஜகவின் இயலாமையை இந்திய மக்கள் உணரும் வகையில் 'இண்டியா ' கூட்டணி பரப்புரை மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். ஆனால் அதை விடவும் இன்றியமையாதது, தமிழ்நாட்டு அரசின் பசிப்பிணி போக்கும் முற்போக்குத் திட்டங்களை இந்தியாவின் மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டியதாகும்.* ●

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
ஆசிரியர் குழு:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை
இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# “ஆரியமா, திராவிடமா? தெரியாது” ஆளுநருக்கு அஞ்சும் எடப்பாடி!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து



திருச்சியில் 25-10-2023 அன்று நடைபெற்ற மருது சகோதரர்கள் நினைவு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என். ரவி “தமிழகத்தின் உண்மையான வரலாற்றை அழிப்பதற்குப் பலமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. திராவிடம், ஆரியம் எனஇருவேறு இனங்கள் இங்கு இருப்பது போன்ற ஒரு தோற்றத்தை ஆங்கிலேயர்கள் உருவாக்கினார்கள். ஆனால், உண்மையில் ஆரியம், திராவிடம் ஆகிய இனங்களே கிடையாது” என்று குறிப்பிட்டார்.

சேலத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இது குறித்தக் கேள்விக்குப் பதில் அளித்த அ.இ.அ.தி.மு.க பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி “இதுக்கெல்லாம் புராணம் படிக்க வேண்டும். நான் அந்த அளவுக்கு படிச்சவன் இல்லை. திராவிடம், ஆரியம் உண்மையா பொய்யா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். அதற்கு நான் சரியான நபர் அல்ல. தவறான பதில் கொடுத்து விடக்கூடாது. அறிஞர்களைப் பார்த்துத்தான் இதனை கேட்க வேண்டும்” என்று தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் ஆளுநராக பொறுப்பேற்றுள்ள நாள்தொடக்கம் உண்மைக்குப் புறம்பானச் செய்திகளைப் பேசி மாநிலத்தில் குழப்பம் விளைவிக்கும் வகையில் செயல்பட்டு வருகிறார் ஆர். என்.ரவி. தற்போது அவரது கருத்து குறித்துப் பதில் அளித்த எடப்பாடி பழனிச்சாமி அவரையும் மிஞ்சி விட்டார்.

பெயரில் திராவிடத்தையும், கொடியிலும் பெயரிலும் பேரறிஞர் பெருந்தகை அண்ணாவையும் தாங்கி இருக்கக் கூடிய ஒரு கட்சியின் பொதுச் செயலாளராக உள்ள ஒருவர், திராவிடம் குறித்த ஆளுநரின் கருத்துக்குத் தக்க எதிர்வினை ஆற்றாமல் இப்படி நழுவிச் சென்றது அவரது அமைச்சரவை சகாக்கள் மீதான வழக்குக் கோப்புகள் ஆளுநர் மாளிகையில் அனுமதிக்காக காத்திருப்பது குறித்த அச்சத்தின் வெளிப்பாடு என்பது தெளிவாகத் தெரிகிறது.

“நான் ஒரு திராவிடன். என்னைத் திராவிடன் என அழைத்துக்கொள்வதில் பெருமைப்படுகிறேன். என்னைத் திராவிட இனத்தைச் சேர்ந்தவன் என்று அழைத்துக் கொள்ளும் போது திராவிடனிடம் இந்த உலகத்துக்கு வழங்க திட்டவட்டமான, தெளிவான மற்றவர்களிடமிருந்து வேறுபட்ட சில திடமான வித்தியாசமான கருத்து உள்ளது என நம்புகிறேன்” என்று நாடாளுமன்றத்தில் தனது கன்னிப் பேச்சில் பேரறிஞர் அண்ணா முழங்கினார். ஆனால் அவர் பெயரில் இயங்கும் கட்சியின் பொதுச் செயலாளர் திராவிடம் இருக்கிறதா இல்லையா என்பது தனக்குத் தெரியாது என்கிறார். இப்படி இருக்கும் சூழலில் பேரறிஞர் அண்ணாவைப் பற்றிய தமிழ்நாடு பா.ஜ.க தலைவர் அண்ணாமலையின் விமர்சனம் காரணமாகவே எடப்பாடி பழனிச்சாமி பா.ஜ.க உடனான கூட்டணியை முறித்துக் கொண்டார் என்பதை எப்படி நம்ப முடியும்.

‘சேக்கிழார்’ எழுதிய கம்பராமாயணத்தைப் படித்த எடப்பாடிப் பழனிச்சாமிக்கு “நான்தான் திராவிடன் என்று நவில்கையில் தேன்தான் நாவெல்லாம். வான்தான் என் புகழ்” என்ற பாவேந்தர் பாரதிதாசனின் பாடல் எப்படித் தெரியும்?

சிறுபான்மையினரின் வாக்குகளைக் கவர்வதற்காக பா.ஜ.கவை விட்டு விலகி விட்டது போல் நாடகமாடும் அ.இ.அ.தி.மு.கவை இனியும் திராவிட இயக்கங்களில் ஒன்றாகக் கருதி ஏற்றுக் கொள்ள முடியாது. தலைவர் கலைஞர் அடிக்கடி “நீதி X அநீதி, தர்மம் X அதர்மம், சுத்தம் X அசுத்தம், தி.மு.க X அ.தி.மு.க” என்று குறிப்பிடுவது போல் அ.இ.அ.தி.மு.க என்பது தி.மு.கவிற்கான எதிர்ச்சொல் மட்டுமே.

அ.இ.அ.தி.மு.கவுக்கும், திராவிடம் மற்றும் பேரறிஞர் அண்ணாவுக்கும் சம்பந்தம் இல்லை என்பதையே எடப்பாடி பழனிச்சாமியின் இந்த நடவடிக்கை உணர்த்துகிறது. தந்தை பெரியார் மண்ணில் பா.ஜ.கவைக் காலூன்ற விடாமல் செய்ய வேண்டுமெனில் அ.இ.அ.தி.மு.கவின் உண்மை முகத்தை மக்கள் முன் அம்பலப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. ●

